விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -13 | 25-02-2004 | புதன்கிழமை | ஓசை-007







# இலட்சியத்தை அடையும் இன்னுமொருவழியாக

# தேர்தலில் கூட்டமைப்பை புலிகள் ஆதரிக்கின்றனர்!

*யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி*

**தமிழினத்தின் விடுதலை இலட்சியத்தை அடைவதற்கு இன்னுமோர் வழியாகவே விடுதலைப்புலிகள் எதிர் வரும் தேர்தலை ஆதரித்து தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு தமது ஆதரவை வழங்குகின்றனர் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.**

நேற்று மாலை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் ஏற்பாட்டுக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்கையில் அவர் இவ்வாறு கூறினார். புலிகளின் இராணுவ பலத்தால் தமிழினம் தனது விடுதலைக் கோரிக்கைகளை உலகறியச் செய்துநிற்கும் வேளையில் தனது போராட்டத்தின் இறுதி இலட்சியத்தை அடைவதற்கு மாற்று வழியாக தற்பொழுது தனது அரசியலை நகர்த்திவருகிறது. அதனடிப்படையில் எமது தலைவர் தேர்தல் மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்கியிருக்கிறார். இராணுவபலமும் அரசியல் பலமும் ஒன்றிணையும் போதுதான் தமிழினத்திற்கு தன் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி உருவாகும். இதனடிப்படை

(8ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் இன்று கிளிநொச்சியில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். இன்று காலை 8.30 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடையும் நோர்வே தூதுவர் மற்றும் தூதரக இரண்டாவது செயலர் தோமஸ்பிராங்லர் ஆகியோர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை எழுச்சி பூர்வமாக எதிர்கொள்ள யாழ். கூட்டமைப்பு வேட்பாளர்கள் முடிவு!

எதிர்வரும் பொதுத்தேர்தலை மிகவும் எழுச்சி பூர்வமாக எதிர் கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்று மாலை 2.30 மணிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் ஏற்பாட்டுக் குழுக்கூட்டம் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள், தேசிய பட்டியல் உறுப்பினர்கள், போராளிகள், ஆதரவாளர்கள் -பொதுமக்கள் என 2000 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இங்குமேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினடிப்படையில் "உயர்ந்தவர்கள் நாமெல்லாம் உலகத்தாய் வயிற்று மைந்தர் பணிந்து இனிப் போக மாட்டோம். நாமெல்லாம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினர் இன்று கிளிநொச்சி வருகின்றனர்

*தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய்வர்*

(அலுவலகசெய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் இன்று கிளிநொச்சி வருகை தரஉள்ளனர்.

அண்மையில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்து எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அதன் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய ஜோசப்பரராசசிங்கம், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், சிறீகாந்தா, சுரேஸ்பிறேமச்சந்திரன் ஆகியோர் உள்ளடங்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பினரே இவ்வாறு வருகை தரஉள்ளனர். இதேவேளை இக்குழுவினருடன் தமிழீழவிடுதலைப்புலி

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் 24 அரசியல் கட்சிகளும் 192 சுயேட்சைக்குழுக்களும் போட்டி

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று நணபகலுடன் முடிவடைந்தது. இத் தேர்தலில் 24 அரசியல் கட்சிகள் போட்டியிடுவதுடன் 192 சுயேட்சை குழுக்களும் தேர்தலில போட்டியிடுகின்றன. பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று 12 மணியுடன் முடிவடைந்தமையைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணிவரை எதிர்ப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதற்கமைய முன் வைக்கப்பட்ட எதிர்ப்புக்களை ஏற்றுக் கொண்டு 07 அரசியல் கட்சிகளினதும் 07 சுயேட்சைக்குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேசிய ஹெல உறுமய, பதுளையில் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்கள் அடங்குகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தமது வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளோரின் விபரங்கள் பின்வருமாறு.

கொழும்பில் 12 அரசியல் கட்சிகளும் 17 சுயேட்சைக்குழுக்களும் இதில் 01 சுயேட்சைக்குழுவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டையில் 07 அரசியல் கட்சிகளும் 08 சுயேட்சைக்குழுக்களும், பதுளையில் 12 அரசியல் கட்சிகளும் 07 சுயேட்சைக்குழுக்களும், கம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தில் 8 கட்சிகள் இரு சுயேட்சைக் குழுக்கள் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கென 10 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 8 பதிவு செய்யப்பட்ட கட்சிகளும், இரண்டு சுயேட்சை குழுவுமாகவே 10 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட ஒரு சில வேட்பு மனுக்கள் தொடர்பாக சில ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டிருந்த போது, அவை நிராகரிக்கப்பட்டு அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பிரதம தெரிவத்தாட்சி அலுவலகம், அரச அதிபருமான செ.பத்மநாதன் அறிவித்திருக்கின்றார். வேட்பு மனுத் தாக்கல் செய்த கட்சிகளும், அவற்றின் சின்னங்களும் வருமாறு

01) இலங்கை தமிழரசு கட்சி வீடு 02) ஈழமக்கள் ஜனநாயக கட்சி-வீணை03) ஐக்கிய சோசலிச கட்சி- ஒட்டோ04) ஜாதிக ஹெல உறுமய-சங்கு05) புதிய இடது சாரிமுன்னணி-மேசை06) றுகுணு மக்கள் கட்சி-கார்07) முஸ்லிம் காங்கிரஸ்-மரம்08) சுயராஜ்ய கட்சி- கோப்பை

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. க்கு ராணுவப் பாதுகாப்பு!

ஈ.பி..டி.பி யும் ஈ.பி.ஆர்.எல்.எப். பெருமெடுப்பிலான இராணுவபாதுகாப்புடன்(வரதா அணியும்) இணைந்து தமது வேட்பு மனுக்களை நேற்று தாக்கல் செய்துள்ளன.

ஈ.பி.டி.பி. யினரின் சின்னமான வீணைச்சின்னத்தில் போட்டியிடவுள்ள இவ்விரு கூட்டமைப்பினரதும் வேட்பு மனுவை ஈ.பி.டி.பி. யின் பிரமுகரான V.குகேந்திரன் என்பவர் யாழ். மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலர் செ.பத்மநாதனிடம் கையளித்தார். இக்கட்சியினர் தேர்தலில் போட்டியிடுவதற்கு மக்கள் தம் பலத்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவரின் தாக்குதலைக் கண்டித்து வடமராட்சியில் மீனவர்கள் போராட்டம்

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களால் உள்ளூர் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மீனவர்கள் எவரும் நேற்றைய தினம் கடலுக்குத் தொழிலுக்குச் செல்லவில்லை. அதேவேளை, இன்றைய தினமும் மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லப் போவதில்லையெனவும், கண்டன எதிர்ப்புக் கூட்டமொன்றை தாங்கள் இன்று நடாத்தப்போவதாகவும் அறிவித்தலொன்றை அப்பகுதி மீனவ சங்கங்கள் விடுத்துள்ளன.

இவ்வெதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் இராணுவ கடற்படை அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டு உள்ளூர் மீனவர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, ஏனைய உள்ளூர் மீனவர்களது பாதுகாப்பு தொடர்பாக அச்சமானதோர் சூழல் தற்போது எழுந்துள்ளதாக வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்திய மீனவர்களால் வெட்டப்பட்டு கடலினுள் வீசப்பட்டிருந்த மீனவரான கனகரத்தினம் இரத்தினம் சிவானந்தன் (வயது-31) என்பவரின் சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. நேற்றைய தினம் மீனவ சங்கங்களின் ஏற்பாட்டில் சுமார் 30 இற்கும் அதிகமான படகுகள் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் தேடுதலை மேற்கொண்டன. அப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த மீனவர்களது மீன்பிடி வலைகள் மீட்கப்பட்டபோதும் இறந்திருக்கலாமென சந்தேகப்படும் மீனவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. (27)

## ஹக்கீமின் வாகனத்திற்கு கல்முனையில் கல்லெறி

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பயணம் செய்த வாகனத்தின் மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கல்முனைக்குடி ஜிம்மா பள்ளிவாசல் முன்பாக இடம் பெற்றுள்ளது.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் அமைச்சரும், ஆதரவாளர்களும் ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சில வாகனங்கள் சேதமடைந்தபோதும் ஊர்வலம் தொடர்ந்தும் இடம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### லொறி விற்பனைக்குண்டு

டாட்டா மெடல் நம்பர் 1109 கன்டா நம்பர் WPHK 20 அரநீ உள்ள பேடி அடித்துள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 470, 6ஆம் யூனிற், இராமநாதபுரம். (4265)

### வெளிவந்து விட்டது

பொதுஅறிவுத் "தேடலும் தெளிவும் 2004" மிகமிக சமீப காலத் தகவல்களுடன் A/L ஆசிரியர் போட்டிப் பரீட்சைதரம் ஐந்து பரீட்சைகளுக்கு மிகச் சிறந்த வழிகாட்டி. மன்னார், வவுனியா, நகரப் புத்த கசாலைகளிலும், வன்னியில்அறிவமுது புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை 70/=. (4268)

### தவறவிடப்பட்ட தாலிக்கொடி

கோணவில், ஜெயந்திநகர் கிளிநொச்சிக்கிடையில் தாலிக்கொடி ஒன்று தவறவிடப்பட்டது. (24.02.2004) கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து காவல்துறையிலோ/புலிகளின் குரல் நடுவப் பணியகத்திலோ ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம். சன்மானம் வழங்கப்படும் . (3534)

# தேசிய பெருவிளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள்

(அலுவலகசெய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

தேசியக் கொடியினை தமிழீழ திரைப்பட வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் ராதா ஏற்றி வைத்தார். துடுப்பாட்டநடுவர் களான செல்வராசா, ஜேக்கப், அம்பாறை மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் குமார், மட்டு தாச்சி அணி தலைவி சுஜா,அம்பாறை வலைப் பந்து வீராங்கனை தினோஜா. யாழ்.கரப்பந்து வீராங்கனை யாசோதா, வவுனியா கபடி அணித் தலைவி அமுதா, மட்டு -அம்பாறை விளையாட்டுதுறை இணைப்பாளர் நிமலன், தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த கிருபாகரன் ஆகியோர் மாவீரர் உருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. கபடி பெண்களுக்கான போட்டியில் வவுனியா அணி யாழ். அணியை 35-6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து ஆண்களுக்கான போட்டியில் மன்னார் அணி திருமலை அணியை 28-27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் ஜஸ்ரின், விமல சேன,அபேகுணசேகரா ஆகியோர் கடமையாற்றினர். நேற்றைய துடுப்பாட்டப்போட்டி அம்பாறை-திருமலை அணிகளுக்கிடையே நடைபெற்றது நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அம்பாறை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 30 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்களைப் பெற்றது அம்பாறை அணி.இந்த அணியின் தலைவர் றியாஸ் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப்பெற்றார். இதில் இறுதிப்பந்தில் பெற்ற பௌண்டரி உட்பட 6 பவுண்ரிகளும் 3 சிக்ஸர்களும் அடங்கும். நியாஸ் 32 ஓட்டங்களையும்,சத்ஜீன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிறீமஸ் 4 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுகளையும், லக்ஸ்மன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருமலை அணி 9விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களைப் பெற்றது. மிகவும் பரபரப்பான முறையில் ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது அம்பாறைஅணி. பார்த்தீபன் 38 ஓட்டங்களையும் அச்சுதன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மதன் சிறாஜ் தலா இரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.


நாளை நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் மட்டு அணியுடன் அம்பாறை அணிமோதும்.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் ஜேக்கப், செல்வராசா ஆகியோரும், நிதர்சனம் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக முருகவேளும் கடமையாற்றினர்.

பிற்பகல் நடைபெறவிருந்த ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் மட்டு அணி சமுகம் அளிக்கதால் கிளிநொச்சி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. தாச்சி பெண்களுக்கான போட்டியில் முல்லை அணி கிளிநொச்சி அணியை 6-4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

இப்போட்டிக்கு நடுவராக க.பீஜெயவிந்தன், சி.த. கணேசலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று கரப்பந்து பெண்களுக்கான இறுதிப்போட்டியில் திருமலை மன்னார் அணிகளுக்கிடையே நடைபெறும். ஏனைய அரையிறுதிப் போட்டிகளாக துடுப்பாட்டம் யாழ்.-வவுனியா, அணிகளுக்கிடையிலும் கபடி (பெண்) கிளி-மட்டு அணிகளுக் கிடையிலும், வவுனியா-முல்லை அணிகளுக் கிடையிலும், கபடி (ஆண்) யாழ்-மன்னார் அணிகளுக்கிடையிலும், வவுனியா-அம்பாறை அணிகளுக்கிடையிலும், தாச்சி(ஆண்) யாழ்- திருமலை அணிகளுக்கிடையிலும், முல்லை-கிளி அணிகளுக்கிடையிலும், தாச்சி(பெண்) யாழ்-திருமலை அணிகளுக்கிடையிலும், முல்லை- வவுனியா அணிகளுக்கிடையிலும், வலைப் பந்து மட்டு -மன்னார் அணிகளுக்கிடையிலும், கரப்பந்து (ஆண்) கிளி- திருமலை அணிகளுக் கிடையிலும் நடைபெறும். (சோ)




## முக்கிய அறிவித்தல்

**பூநகரி பிரதேசசபை எல்லைக்குள் குடமுருட்டிப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங் களில் மணல் ஏற்று தல் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் முழங்காவில், வேரவில், பத்தினிப்பாய் மற் றும் தனியார் பொதுக்காணிகள் யாவற்றிலும் கல் அகழ்ந்து ஏற்று தல் 25.02.2004இல் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டுள்ளது. இதற்கான முடிவு மிகவிரைவில் அறிவிக்கப்படும் என்பதையும் அறியத் தருகிறேன்.**

**க.தனபாலசிங்கம்,**
**விசேட ஆணையாளர்,**
**பூநகரி பிரதேசசபை.**

(சி-9099)


## திறப்பு விழா

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமிய சுகாதார நிலைய திறப்பு விழாஇன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நடைபெறும் யு.என்.எச்.சி.ஆர் நிறுவன நிதியுதவியுடன் போருட் வன்னி கந்த்திட்டத்தின் ஊடாக வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனமும் கிளி. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மேற்படி கிராமிய சுகாதார நிலையத்தினை அமைத்துக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## முல்லை. மாவட்ட வாக்காளர் இடாப்பு பார்வையிட முடியும்

"முல்லை மாவட்டத்தின் வாக்காளர்களுக்கான 2003 ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்களில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களைச் சார்ந்த வாக்காளர்களுக்கான வாக்காளர் இடாப்புக்களை முல்லைத் தீவுக் கச்சேரியிலும், துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுகளைச் சார்ந்த வாக்காளர்களுக்கான வாக்காளர் இடாப்புக்களை துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலகங்களிலும் பார்வையிடலாம் என்பதனை முல்லை மாவட்ட செயலர் திருமதி. இமெல்டா சுகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்."

இதேவேளை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வன்னியில் வசிக்கும் வாக்காளர்களின் நன்மை கருதி அவர்கள் தமது இடம்பெயர்ந்திருக்கும் இடத்திலேயே வாக்களிக்கக் கூடியதாக யாழ். மாவட்டத்தின் வாக்காளர் இடாப்புக்களும் கச்சேரி அலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார். (20)


## பவள விழாக்காணும் கிளிநொச்சி மத்திய கல்லூரியை வாழ்த்துகிறோம்

போர் சுமந்து
பொன் மேனியின் வடு பதிந்து
கல்லூரியே கல்லெனினும்
கல்விச் செல்வம் காத்து நின்றாய்

ஏர் பிழந்த
எம்மினிய பூமியிலே
ஏற்றிவைத்த தீப ஒளி
எரியச் செய்தாய்

பார் புகழ நின்பணி
பரவி நிற்க
பவளநாளில் உனையேற்றுகிறோம்
கார் அகன்று கதிரொளி
பரவி நிற்க
கல்விக் கடலே வாழ்த்துகிறோம்.

(35 35) *தமிழீழ மாணவர் அமைப்பு*



## ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம்

## பகிரங்க ஏல விற்பனை

**ஜி.ரி.இசற்-வட புனரமைப்புத்திட்டம் தங்களுடைய திட்டத்தில் பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள இரண்டு வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளது.**

1. **Nissan Double cap pickup (1991) தொடர் இல: 250-6780**
2. **Nissan Double cap pickup (1990) தொடர் இல: 250-6901**

**இந்த வாகனங்களின் ஏல விற்பனை மூலமாகப் பெறப்படும் பணம், யாழ்.அரச அதிபர் மற்றும் ஜி.ரி.இசற்-வட புனரமைப்புத்திட்டம் இணைந்து செயற்படும் நிதிக்கு நேரடியாக செலுத்தப்பட்டு அதனூடாக நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தித்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.**

**ஏல விற்பனை நடைபெறும் திகதி :- 15.03.2004 திங்கட்கிழமை நேரம் மு.ப. 10.00 மணி**

**இடம்:ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்ட அலுவலகம், 472, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.**

**இவ் ஏலவிற்பனை சம்பந்தமான மேலதிக விபரங்களை 472, பிரதான வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வாகனங்களையும் பார்வையிடலாம் .**

**ஆலோசகர்,**
**ஜி.ரி.இசற்-வட புனரமைப்புத்திட்டம்**
**23.02.2004**

(சி-9304)

# இஸ்ரேலின் வேலியமைக்கும் முயற்சிக்கு சர்வதேச நீதிமன்றத்தில் கண்டனம்!

## -03வது நாளாக இன்றும் விசாரணை

**இஸ்ரேல் பலஸ்தீனத்தின் மேற்குக்கரையை ஊடறுத்து அமைத்துவரும் பாதுகாப்புச் சுவர் குறித்து சர்வதேச நீதிமன்றம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்த விசாரணை நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது.**

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேற்படி இஸ்ரேலிய பாதுகாப்புச் சுவர் குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த விசாரணை இன்று மூன்றாவது நாளாகத் தொடரவுள்ளது.

இஸ்ரேல் மேற்படி நீதிமன்ற விசாரணைகளை புறக்கணித்துள்ள நிலையில் பலஸ்தீன தரப்பு விசாரணைகளில் பங்கேற்று வருகின்றது. பலஸ்தீன தற்கொலைக்குண்டுதாரிகளிடமிருந்து தமது பிரஜைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இவ்வாறான வேலியொன்றின் அவசியத்தை இஸ்ரேல் வலியுறுத்திக் கூறியுள்ளது. இருப்பினும் பலஸ்தீன ராஜ்யத்தைக்கட்டி எழுப்பும் தமது முயற்சிக்கு பாதுகாப்பு வேலி பெரும் தடையாக இருப்பதாக பலஸ்தீனம் கருதுகிறது.

இந்த நெருக்கடி பெரும் அரசியல் நெருக்கடியை வலுவாக்கும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இந்நிலையில் மேற்குக் கரையில் பாதுகாப்புச் சுவரை அமைக்கும் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய அரசாங்கம் சர்வதேச அரங்கில் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளதும் குறிப்பிடத் தக்கது.



மேற்குக்கரை நகரில் இஸ்ரேல் பாதுகாப்பு சுவரை உருவாக்கி வருவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் பலஸ்தீனர்கள்

# ஈராக்கில் பொலிஸ் நிலையம் மீது கார்க்குண்டுத்தாக்குதல்

## -10பேர் பலி; 40 பேருக்குக் காயம்

ஈராக்கின் ஹிர்க்குக் நகரிலுள்ள பொலிஸ் நிலையமொன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட பாரிய கார்க் குண்டுத் தாக்குதலில் 10பேர் பலியாகினர். நாற்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

கடமை நேரம் மாற்றத்தின் போதே இந்தக் கார்க் குண்டுத் தாக்குதல் நடைபெற்றதாகவும் அவ்வேளை பொலிஸ் அதிகாரிகள் பலர் அங்கு பிரசன்னமாகியிருந்த[illegible]ும் கூறப்படுகிறது.ஹிர்க்குக் நகரப் பகுதியில் அமெரிக்க மற்றும் [illegible] ஆதரவிலான படையினர் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகி வருகி[illegible]றமை குறிப்பிடத் தக்கது.



நேற்று முன்தினம் ஈராக்கில் ஹிர்க்குக் நகரில் பொலிஸ் நிலையத்தில் நடந்த கார்க்குண்டுத்தாக்குதலையடுத்து அங்கு கூடியுள்ள பொலிசாரும் மருத்துவப்பிரிவினரும்.

# கெயிட்டி தலைநகரை மீட்க கிளர்ச்சியாளர் முயற்சி

கெயிட்டியில் சனாதிபதி அடிஸ்டைட்டிற்கு எதிராக போராடிவரும் கிளர்ச்சி வாதிகள் தலைநகர் போர்ட் ஓ பிரின்ஸ்சை கைப்பற்றி விடுவோமென எச்சரிக்கை செய்துள்ளனர்.

இரண்டாவது பெரிய நகரை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ள அவர் மேற்கொண்டு சனாதிபதிக்கு விசுவாசமான படையினருக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

50 இலட்சம் மக்கள் வாழும் கெயிட்டியை முழுவதுமாக கிளர்ச்சியாளர் கைப்பற்றி விட அனுமதிக்க முடியாது என ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் தலைநகரைக் கைப்பற்றுவோம் என்ற எச்சரிக்கையை கிளர்ச்சிக்குழுவின் தலைவர் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கெயிட்டியில் இரண்டாவது பெரிய நகரத்தை கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கெயிட்டி தேசிய புரட்சி முன்னணியின் தளபதி ஏனைய வீரர்களைப் பாராட்டுகிறார்.

# தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைத்தல் ஈராக்கின் உடனடித் தேவையாகவுள்ளது

## -ஐ.நா.பொதுச் செயலாளர் வலியுறுத்து

இவ் ஆண்டிற்கு முன்னர் நீதியும்,நியாயமுமான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டுமானால் ஈராக்கில் உடனடியாக தேர்தல் ஆணைக்குழு ஒன்றுஉருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்தஆண்டு வரைதேர்தலை நடத்தவது சாத்திய மற்றதென பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது அண்மையில் ஈராக்கிற்குச் சென்றதேர்தல் தொடர்பான அதிகாரிகள் குழு ஒன்றுஇவ் அறிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது அனானின் ஆலோசகர் இக்குழுவிற்கு தலைமை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்துக்கு 110கி.மீ. தொலைவிலுள்ள கர்பலாவுக்கு அண்மையில் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் குழாயருகில் காவல் கடமையில் ஈடுபடும் ஈராக்கிய பொலிசார்

### பின்லேடன் கைதானால் அமெரிக்காவிடம் ஒப்படைப்பு

(இஸ்லாமாபாத்)

ஒசாமா பின்லேடனை பாகிஸ்தானில் வைத்துப் பிடித்தால் அவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவாரென பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள தொடாகாகர் மலையில் ஒளிந்திருக்கும் பின்லேடனைப் பிடிப்பதற்கு பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படைகள் தங்களின் தலைமைகளின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

### விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் விபத்து

(புதுடில்லி)

ஆந்திர மாநிலத்திலுள்ள சிறிஹரி கோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 6 பேர் பலியாகினா; மூவர் காயமடைந்தனர் இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

# லிபிய அணுவாயுத திட்டங்கள் ஜூன் மாதத்திற்குள் களைவு

லிபியாவின் அணுவாயுதத் திட்டங்கள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் முற்றாக களையப்படுமென எதிர்பார்ப்பதாக ஐ.நா. சபையின் அணுவாயுத கண்காணிப்பு அமைப்பு தெரிவித் துள்ளது.

அதன் தலைவர் முகமட் அல் பராய்டி ஈரான், வடகொரியா போன்ற நாடுகளும் லிபியாவைப் போன்று நடந்துகொள்ளவேண்டுமென தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுவாயுத நிறுவனத்தின் தலைவர் அல்பராய்டி லிபியாவிற்கான இரண்டுநாள் விஜயம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் அமெரிக்க பிரிட்டன் நிபுணர்கள் லிபியாவின் அணுஆலைகளை சோதனைசெய்து வருவதாகவும்,எனது அமைப்பு அதனை விரைவில் ஆங்கீகரிக்குமெனவும் தெரிவித்துள்ளார்.

## -தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி-

# இந்தியாவில் 3 கோடி அரச ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பு!

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் நேற்று மூன்று கோடி அரச ஊழியர்கள்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தம் செய்யும் உரிமைக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு வழங்கக் கோரியே இந்தப் போராட்டம் நடந்துள்ளது.

மத்திய மாநில அலுவலகங்கள், தனியார் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களை உள்ளடக்கியவர்கள் உட்பட பல்வேறு ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

ஏற்கனவே பறிக்கப்பட்ட எல்லா சலுகைகளுமே திரும்பத்தர வேண்டுமென்று தமிழக அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இலட்சக் கணக்கானவர்கள் பணி நீக்கம் கூட செய்யப்பட்டார்கள்.

இதனையடுத்து பணிநீக்கம் தொடர்பாக ஊழியர்கள் உச்சநீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்த போது, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இல்லையென்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதனையடுத்து வேலைநிறுத்த உரிமையை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தக்கோரி மத்திய தொழிற்சங்கங்கள் அனைத்தும் அழைப்பு விடுத்தன.

இதனையடுத்தே நேற்று மூன்று கோடி ஊழியர்கள் இந்தியா முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் மத்தியரசு தலையிட்டு திருத்தங்களைச் செய்து பாராளுமன்றத்தில் வேலை நிறுத்த உரிமைப் பாதுகாப்புக்காக சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதாக தொழில் சங்கங்கள் கூறின.அதேநேரம் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தொழில் சங்கங்கள் கூறியுள்ளன.

# தாய்வான், பிரான்ஸ் நாடுகளில் சிறியளவில் பூமியதிர்ச்சி!

தாய்வான், பிரான்ஸ் நாடுகளில் நேற்று பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தாய்வானின் கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை ஏற்பட்ட பூமியதிர்ச்சி றிக்டர் அளவு கோலில் 5.3என பதிவாகியுள்ளது. இதனால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லையென தாய்வான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

பிரான்ஸின் கிழக்குப்பகுதியில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சி றிக்டர் அளவு கோலில் 5 என பதிவாகியுள்ளது இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

# கடந்த வாரத்தில்...

16-02-2004 - 22-02-2004



பயிற்சி நிறைவில் சிறப்பிப்பு

**16:**

★ யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வானருடுகே மற்றும் படையதிகாரிகளைச் சந்தித்த போ.க.குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே தேர்தல் காலத்தில் இராணுவம், பொலிஸ் குடாநாட்டில் எத்தகைய நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது குறித்தும், யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பது குறித்தும் ஆராய்ந்தனர்.

★ யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி, யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி மற்றும் இமயவன் ஆகியோர் போ.நி.க.குழுத் தலைவர் புறூவ் ஹொவ்டேயைச் சந்தித்து யாழ்.மாவட்டத்தில் பல்வேறு கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுவதால் இவற்றைக் கட்டுப்படுத்தப் பொலிசார்மிகுந்த கரிசனையுடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

★ ஈராக்தாத்தில் குண்டுத் தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் பலி.

★ **W.W.W news.wire.lk** என்ற புதிய செய்தி இணையத் தளம் வைபவ ரீதியாக கோல்பேஸ் ஹோட்டலில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

★ முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சை காந்தியின் மனைவி மேனகா காந்தியும் மகன் வருண் காந்தியும் பாரதிய ஜனதாக்கட்சியில் இணைந்தனர்.

**17.**

★ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் யாழ், திருமலை, வவுனியா, மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் 4 கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்களும் மற்றும் கட்சிச் செயலாளர்களும் சந்தித்து விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தின் கரிசனைகள் சம்பந்தமாகவும் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினர்.



எதிர்கால அரசியல் முன்னெடுப்பு

★ முன்னாள் இந்திய இணை வெளியுறவு அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தருமான எடுவாடோ பெலேரா யாழ்.மாவட்ட அரச அதிபர் எஸ்.பத்மநாதனைச் சந்தித்த பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

★ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக்குழுக் கூட்டம் முன்னணியின் தலைவி சந்திரிகா தலைமையில் ஆரம்பமானது. முன்னணியின் தவிசாளர் உட்பட நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

★ பொ.ஐ.மு.சேர்ந்த வடமத்திய மாகாணசபையின் கைத்தொழில் கிராமிய தொழில்துறை அமைச்சர் கே.பி.தென்னக்கோன், ஐ.தே.க.தவிசாளர் மலிக் சமரவிக்கிரம முன்னிலையில் ஐ.தே.க.வில் இணைந்ததிற்கான அங்கத்துவத்தைப் பிரதமரிடம் பெற்றுக்கொண்டார்.

★ பூலான் தேவி கொலையின் முக்கிய சந்தேக நபர் டில்லி திஹார் சிறையில் இருந்து தப்பி ஓட்டம். இவரின் சகாக்கள் பொலிஸ் சீருடையில் சிறைக்குள் வந்து அழைத்துச் சென்றனர்.

★ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தேர்தல் பற்றிக் கலந்துரையாடினார்.

**18.**

★ அரசியல்துறைப் பொறுப்பாளர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனுடன் தமிழ் மக்களுடைய அரசியல் பலத்தினை ஒன்று திரட்டுவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

★ இந்திய, பாகிஸ்தான் நாடுகளிடையே தொடரும் பகைமைக்கும், நம்பிக்கையீனத்திற்கும் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்கள் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஆரம்பமாகின.

★ ஈரானின் கோரஸ்ஸன் மாகாணத்தில் நெஷாபப் என்ற நகருக்கு அருகில் கந்தகம், பெற்றோல்,உரம் ஆகியவற்றை ஏற்றிவந்த ரயில் தடம்புரண்டு தீப்பிடித்ததில் 300 பேர் பலி, 450 பேர் படுகாயம். 5 கிராமங்கள் அழிந்தன.

★ பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவின் சேவைக்காலம் ஆறு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவிப்பு.

★ சிறி.சு.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அந்தரங்கச் செயலாளராக நீண்ட காலம் கடமையாற்றிய வருமான கீர்த்தி சுரஞ்ஜித் மாவல்லகே ஐ.தே.க.இல் இணைந்தார்.

**19.**

★ ஈழநாதம் மக்கள் தினசரி 15வது அகவையில் காலடி எடுத்து வைக்கும் நிகழ்வு சிறப்புற நடந்தேறியது.



15-வது அகவையில்

★ இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு.

★ ஜப்பான் பேராசிரியர் கிறிஸ்ரியன் ஆவாட்ஸ் விடுதலைப்புலி உறுப்பினர்களைச் சந்தித்து தற்போதைய நாட்டு நிலவரம் குறித்தும் நடைபெறவுள்ள தேர்தல் நிலவரம் குறித்தும் கலந்துரையாடினார்.

**20.**

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் பயிற்சி நிறைவில் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் சாகச நிகழ்வுகளையும் பார்வையிட்டார்.



தேசிய பெருவிளையாட்டு விழாவில்..

★ மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டுவிழா கோலாகலமாக ஆரம்பம்.

★ ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் சனாதிபதியைச் சந்தித்து பாதுகாப்பு நிலவரம், அரசியல் நிலை குறித்து ஆராய்ந்தனர்.

**21.**

★ தமிழ் கூட்டமைப்பினரை யாழ் மாவட்ட அரசியல் துறையினர் சந்தித்து யாழ் மாவட்டத்திலிருந்து போட்டியிடவுள்ள வேட்பாளர் பட்டியல் தயாரிப்புக்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

★ சாவகச்சேரிப் பகுதியில் முகமூடி அணிந்து சீருடையில் வந்தோர் கடை ஊழியரைச் சுட்டுவிட்டு பல லட்சம் பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

★ சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இரகசிய சிறைக்குள் சென்று சதாமைச்சந்தித்தனர்.

★ வடக்கு உகண்டாவில் வீரா நகரிலிருந்து 26கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அகதிமுகாமில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது தீவிர வாதிகள் நடத்திய வெறியாட்டத்தில் 192பேர்பலி, 56பேர் படுகாயம்.

**22.**

★ விளக்குவைத்தகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்தபோர்நிறுத்தக் கண்காணிப்புகுழுவினர் முன்னணி நிலைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.



புலிகளுடன் சந்திப்பு

★ போராளி கவிஞர் அம்புலியின் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" கவிதை நூல் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது.

★ சிறி.சு.கட்சியிலிருந்த முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல்லும் அவரது மனைவியான நாடாளுமன்ற உறுப்பினர் மல்லிகா டி மெல்லும் ஐ.தே.க.வி இணைந்து கொண்டனர்.

★ ஜெருசலேமில் பஸ் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 7பேர் பலி, 12ற்கு மேற்பட்டோர் காயம்.

★ ஆப்கானிஸ்தானில் நெடுஞ்சாலைப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நிறுவனம் ஒன்றின் ஹெலிதாக்கப்பட்டதில் விமானி கொல்லப்பட்டார்.

# வட கிழக்கு ஒப்பந்தகாரர்களுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சிப்பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

வடக்கு கிழக்கு ஒப்பந்தகாரர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிப பட்டறையின் தொடரில் கிளிநொச்சி மாவட்ட ஒப்பந்தகாரர்களுக்கான பயிற்சி நெறி ஜீரி.இசெற் நிறுவன விசேட செயற்திட்ட ஆலோசகர் வோல்ரர் கெல்லர் தலைமையில் நேற்றுமுன்தினம் மூன்றாவது நாளாக கிளி நொச்சி கச்சேரியிலுள்ள சிரான் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் தளதிட்டமிடல் வளங்களுக்கான திட்டவரைபு இயந்திரவியல் முகாமைத்துவம் ஆகிய பகுதிகளுக்கான விரிவுரைகளையும் பயிற்சியையும் பொறியியலாளர் பி.கணேசலிங்கமும்

நடைமுறை வேலைத்திட்டம், நிர்மாண முறை அறிக்கை, நெருக்கடிப்பாதை அட்டவணை, நிதித் திட்டமிடல், பண அசைவு முன்னறிவு கூற்றும் முன்னேற்றத்தையும், செலவுக்கட்டுப்பாட்டையும் கண்காணித்தல் ஆகிய பகுதிகளுக்கான விரிவுரைகளையும் பயிற்சியையும் பொறியிலாளர் எஸ்.ரி.தேவராஜனும் நிதிக்கணக்கியலின் அடிப்படைத்தத் துவங்கள் என்ற பகுதிக்கான விரிவுரைகளையும் பயிற்சியையும் ரவிமகேந்திராவும் சிதாத்திஸாநாயக்கவும் வழங்கினர்.

நிக்கொட் ஜீ.ரி.இசெற் ஒழுங்குபடுத்தலில் நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் நடைபெற்ற இவ் அறிவூட்டல் நிகழ்ச்சிப் பட்டறையில் கலந்துகொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு பிற்பகல் சான்றிதழ் வழங்கப் பெற்றது.

சான்றிதழ்களை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஜீ.ரி. இசற் நிறுவன விசேட செயற்திட்ட ஆலோசகர் வோல்ரர் கெல்லர், கிளி மாவட்ட நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப்பணிப்பாளர் பார்த்தீபன் மற்றும் துறைசார் அதிகாரிகள் அறிவூட்டல் பட்டறை முடித்துக்கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வவுனியாவில் ஐ.தே.மு. வேட்பாளர்கள் ஏட்டிக்குப் போட்டியாக வாகனப் பேரணி!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்கள் நடாத்திய வாகனப் பேரணியால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

நண்பகல் வன்னி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் ஐக்கிய தேசிய முன்னணி தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தபின் அக்கட்சியின் இருவேட்பாளர்கள் தனித்தனியே போட்டிபோட்டு இரு வாகனப் பேரணிகளை நகர்பகுதியில் நாடத்தியுள்ளனர்.

முதலில் ஜனாப், றிசாப் பதியுதீனுக்கு, ஆதரவானவர்கள் றிசாப் பதியுதீன் தலைமையில் வாகனப் பேரணியை நடத்தினர். இதன் போது ஆத்திரம் அடைந்த முதன்மை வேட்பாளர் ஜனாப் நூர்தீன் மசூரின் ஆதரவாளர்கள் பேரணியைக் குழப்ப முயன்றுவிட்டு பின்தாமும் உடனடியாக நூர்தீன் மசூரின் தலைமையில் ஒரு வாகனப் பேரணியை நடத்தினர். இதனால் வவுனியா நகர்ப்பகுதியிலும் கண்டி வீதியிலும் போக்குவரத்து பல மணித்தியாலங்கள் தடைப்பட்டது. (10)

# பொது நோக்கு மண்டபம் விசுவமடுவில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

விசுவமடு குமாரசாமிபுரத்தில் கெயார் நிறுவன நிதி உதவியுடன் சமூகமேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் மங்கல விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கண்டாவளை பிரதேச உதவி அரசாங்க அதிபரும், கிளி/தருமபுரம் அ.த.க. பாடசாலை அதிபரும் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடு துயிலும் இல்லப் பொறுப்பாளர் பொழிலன் ஏற்றினார். மண்டபத்தின் பெயர்ப்பலகையினை கெயார் சர்வதேச பிரதிநிதி செல்வி சுபாஜினி திரை நீக்கம் செய்து வைத்தார். மண்டபத்தினை கண்டாவளை பிரதேச உதவி அரசாங்க அதிபர் திறந்து வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் மண்டபத்தில் நிறுவன இயக்குனர் சிரஞ்சீவி தலைமையில் ஆரம்பமானது. வரவேற்புரையை செல்வி தவப்புதல்வியும் தலைமையுரையை நிறுவன இயக்குனரும் சிறப்புரைகளை உதவி அரச அதிபரும், விசுவமடு பிரதேச பொறுப்பாளர் செழியனும், கெயார் சர்வதேச பிரதிநிதி செல்வி சுபாஜினியும் நிகழ்த்தினர். ஆசியுரையினை கிராம சேவகர் கோ.சேகர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து கிராம சேவகர் மண்டபத்தை நிறுவன இயக்குனரிடம் கையளித்தார். நன்றி உரையை நிறுவனத்தின் இணைப்பாளர் கமலநாதன் நிகழ்த்தியதை அடுத்து நிகழ்வு நிறைவடைந்தது. (15)

## கட்டாக்காலிகளை பேறுக!

(உடையார் கட்டு)

கட்டாக்காலிகளாக பயிரழிவில் ஈடுபட்ட மாடுகள் விசுவமடுப்பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பராமரிப்பிலுள்ளது.

எனவே இவற்றை உரியவர்கள் எதிர்வரும் 29.02 இற்கு, முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இல்லையெனில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படுமென விசுவமடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் றொபேட் தெரிவித்துள்ளார்.

குறிவிபரம் வருமாறு1) E.S சிவப்பு பசு 2)கறுப்பு பசுக்கன்று 3)B.S.S வெள்ளைப்பசு. (19)

# நீண்ட இடைவெளியின் பின்

# தமிழர் மத்தியில் தேர்தல் பரபரப்பு!

இலங்கையில் தேர்தல்களம் படிப்படியாகச் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த இரு தசாப்தங்களாகத் தேர்தலில் இருந்து பெருமளவில் ஒதுக்கியிருந்த வடக்கு- கிழக்கு மக்கள், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியிலும் இம்முறை தேர்தல் பரபரப்பும், தேர்தல் பற்றிய பேச்சும் காணப்படுகின்றது. இதற்கு இம்முறை விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்தலில் போட்டியிடாது விட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் ஏக பிரதிநிதித்துவம், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை தொடர்பான நிலைப்பாடு என்பனவற்றை அங்கீகரித்துத் தேர்தலில் போட்டியிடுவதினால், இத்தேர்தல் முடிவானது, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, தலைமைத்துவம் என்பனவற்றிற்கு மக்கள் அளிக்கும் அங்கீகாரதை வெளிப்படுத்தப்படுவதாகவே இருக்கும்.

இலங்கையில் உள்ள சிறுபாண்மையினரின் பிரச்சினைக்கு- குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தேர்தல் மூலம் தீர்வு காணப்படுமென நம்புவதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவே. ஏனெனில், சிறிலங்கா சுதந்திரம் பெற்றதன் பின்னர் பொதுவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற ரீதியில் பல தேர்தல்களும் கடந்த சில வருடங்களில் ஆண்டிற்கு ஒன்று என்ற ரீதியில் பல தேர்தல்களும் நடைபெற்று விட்டன. ஆனால், பிரச்சினைக்கான தீர்வில் முன்னேற்றமான காரியங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

தமிழ்மக்கள் சிறிலங்கா பாராளுமன்றத்தை நம்புவதற்கு எதுவுமேயில்லை. ஆனால் இம்முறை பாராளுமன்றத் தேர்தலை சனநாயகத்தின் பெயரில் வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டியதாகியுள்ளது. அத்தோடு தேர்தலில் இம்முறை மக்கள் பெருமளவில் வாக்களிக்க வேண்டிய தேவையும் உண்டு. அதாவது தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமை தொடர்பான விடயத்தில் உறுதியாகவே உள்ளனர் என்பது வெளிப்படுத்த வேண்டியதாகிறது.

அத்தோடு இலங்கையை இதுவரை ஒரு தனிக்கட்சி மட்டும் ஆட்சி செய்யவில்லை. மாறிமாறி இருபிரதான கட்சிகளும் ஆட்சி செய்துள்ளன. அதேவேளை இடது சாரிகள் உட்பட சிறிய கட்சிகளும் ஆட்சியதி காரத்தில் பங்கேற்றுள்ளன. ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை அவற்றால் எட்ட முடியவில்லை. எட்டுவதற்கு அவை விரும்புவதாகவுமில்லை.

அதுமாத்திரமல்ல. தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பாராளுமன்றம் சென்றவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் நிரம்பவே பேசியும் விட்டனர். சிறிலங்காப் பாராளுமன்றத்தை தமிழ் மக்களின் பிரச்சினைக்கான பிரச்சார மேடையாக்குவோம். என்ற ரீதியில் பாராளுமன்றம் சென்றோரினாலும் பயன் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. அதாவது அவர்களின் பிரச்சாரமும் எடுபடவில்லை. இதே வேளை பாராளுமன்றத்தில் காட்டப்பட வேண்டிய எதிர்ப்பும் சனநாயக ரீதியில் சாத்வீகமான முறையில் காட்டப்பட்டு விட்டது. ஆனால் இவற்றால் பயனேதும் ஏற்பட்வில்லை. அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத் தயாராக இருக்கவில்லை.

அதுமட்டுமல்ல சிறிலங்காவில் தற்பொழுது எழுந்துள்ள பெரும் அதிகாரப் போட்டியின் ஊடு சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவரும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி விடுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் நாம் நம்பவில்லை. அதாவது தேர்தல் மூலம் மீண்டும் ஐ. தே. முன்னணி அரசாங்கம் பதவி வகித்தாலும் சரி சிறிலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி, கூட்டணி ஆட்சியமைத்தாலும் சரி இது சாத்தியமாகுமா என்பது சந்தேகமே.

ஏனெனில் ஐ. தே. முன்னணி அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் ஓராண்டு காலத்தின் பின்னர் அதனைக் கலைத்துவிடும் அதிகாரம் சனாதிபதி சந்திரிகாவிடம் உண்டு. இதேவேளை சு. கட்சி -ஜே.வி.,கூட்டணி ஆட்சிக்குவரின் அதிகாரப்பரவலாக்கல்விடயத்தில் இரு கட்சிகளுமே இணக்கப்பாடின்றி இருக்கையில் எவ்வாறு இனப்பிரச்சினை விடயத்தில் முன்னேற்றம் காணப்படுமென எதிர்பார்க்க முடியும். அதாவது புதிய பாராளுமன்றம், புதிய அரசாங்கம் என்பவை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்ற நம்பிக்கை தோன்றவில்லை.

இந்நிலையில் தான் சிறிலங்கா பாராளுமன்றத்தின் மீதும், தேர்தலின் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். இக்காலகட்டத்தை சில தேசவிரோதக் கும்பல்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளைத் தமது சொந்த நலன்களுக்காக பேரம்பேசியும், விற்பனை செய்தும் வந்தன. இது அவர்களுக்கு பெரும் அனுகூலமாகியுள்ளது.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டமானது பெரிதும் முனைப்புப் படுத்தப்பட்டு இராணுவரீதியில் பல சாதனைகளைப் புரிந்ததோடு தமிழர்தாயகத்தில் பெருமளவு நிலப்பரப்பையும் தமது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தது. இந்நிலையில்தான் சர்வதேச மத்தியஸ்த்துவத்துடன் கூடியதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதாவது சிறிலங்கா அரசு மீதான நம்பிக்கை இழக்கப்பட்டிருந்த நிலையில் சர்வதேசத்தின் மத்தியஸ்த்துவம் என்பது அவசியமாகியது.

ஆனால் இரண்டாண்டுகள் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் சனாதிபதி சந்திரிகாவினால் குழப்பியடிக்கப்பட்டதோடு பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது. இந்நிலையில்தான் தமிழ் மக்கள் தமது உறுதியான நிலைப்பாடு ஒன்றை வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் கட்டாயத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் பெரும் அர்ப்பணிப்புக்களுடனும், தியாகங்களுடனும் கூடியதாகும். இதற்குத் தலைமை தாங்கி நடத்திய விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு வழி முறையாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை சிறிலங்கா அரசாங்கத்துடன் ஆரம்பித்தது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள்இயக்கம்தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையிலான கோரிக்கைகளை முன்வைத்ததோடு அது குறித்து சிறிலங்கா அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகளையும் நடத்தத் தயாராக இருந்தது. விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடானது சர்வதேச ரீதியில்பெரும்பாலும் வரவேற்கப்பட்டதொன்றாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ள அமெரிக்கா பிரிட்டன் உட்பட்ட நாடுகள் கூட இதனை வரவேற்றிருந்தன.

ஆனால், தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு , விடுதலைப் புலிகள் ஏக பிரதிநிதிகள் என்பனவற்றைக் குழப்பியடிப்பதற்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை பலவீனமடையச் செய்யும் நோக்கிலும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் சிலவும், தேசவிரோதக் கும்பல்களும் இருக்கத்தான் செய்தன. இவை இணைந்து சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின.

இதன் ஓர் அங்கமே சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பியடிப்பதற்கென சனாதிபதி சந்திரிகாவினதும் நடவடிக்கைகளாகும். அத்தோடு விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீ[illegible] சாத்தியமானதல்ல, ஏனைய தமிழ்க்குழுக்களுடனும், பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுதல் வேண்டும் என்பதும் அவர்களின் வலியுறுத்தலானது தமிழர் தரப்பைபலவீனப்படுத்தும் நோக்குடையதாகும்.

அதாவது உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஏவலர்களாகச் செயற்படுபவர்களும் பேச்சுவார்த்தையில் இணைத்துக்கொள்ளப் படுதல் வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும். ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தையும் நியாயப்பாடான கோரிக்கைகளையும் பலவீனப்படுத்துவதற்கு இது அவசியமானதாகும்.

இதற்கு ஏற்றவகையில் சில தமிழ்க் குழுக்களின் தலைவர்களைத் தமது கைக்குள் போட்டுக்கொண்டதோடு தமிழர்தரப்பில் பிளவுகளையும்,பிரிவுகளையும் ஏற்படுத்துவதிலும் முனைப்புக் காட்டி வருகின்றன.

இந்தப் பட்டியலில் இறுதியாக இணைந்து கொண்டிருப்பவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கைகளும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளே உள்ளனர் என்பதும் மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தப்பட வேண்டிய தேவை உருவாகியுள்ளது. அதாவது சர்வதேச சமூகத்தின் முன்னர் விடுதலைப்புலிகளே தமிழ மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பது மீண்டும் ஒரு தடவை நிருபணம் ஆக வேண்டிய தேவை உள்ளது.

இந்நிலையில்தான் விடுதலைப் புலிகளின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வரும் தமிழர்தேசியக் கூட்டமைப்பினருக்குத் தேர்தலில் புலிகள் தமது ஆதரவை வழங்க வேண்டியநிலை உருவாகியுள்ளது.

அதாவது தமிழ் மக்கள் இன்று கொள்கைக்காக வாக்களிக்க வேண்டியவர்களாகவுள்ளனர். தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டிற்கு ஆதரவுத் தெரிவித்து வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அதாவது சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைக்காது போனாலும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்றும் தமிழ் மக்களின் தன்னாட்சி தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டிற்கு வழங்கும் அங்கீகாரமாகவும் இத்தேர்தல் அமையவுள்ளதினாலேயே இத்தேர்தல் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்க்கை ஏற்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் மக்களின் இவ் உறுதியான நிலைப்பாடு வெளிப்படுவதைத் தடுத்து நிறுத்தவும்,குழப்பத்திற்கு உள்ளாகவும் பல சக்திகள் முற்படுதல் கூடும். இதெற்கென பெரும் பணபலமும், அதிகார பலமும் கூடப்பயன்படுத்தப்படக் கூடும். சில வேளைகளில் ஆயுதப் படைத்தரப்புக் கூட பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அத்தகைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமையும் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

ஆகையினால், இம்முறை தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு எதிராக இடையூறுகள் விளைவிக்கப்படலாம். ஆனால், தமிழ் மக்கள் இம்முறை தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடியதான தேர்தலில் வாக்களிக்க இருப்பதினால் மிகவும் உறுதியாகவும், நிதானமாகவும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள் என்றே எதிர்பார்க்கலாம். □

ஜெயராஜ்

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுவர்

### இராணுவத் தளபதி கூறுகின்றார்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை வாக்காளர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சிறிலங்கா இராணுவத் தளபதி பலகல்ல தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து வருகை தருகின்ற வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் மட்டுமே வாக்களிக்க முடியும் வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார் கள். ஆனால் அவர்கள் வாக்களிக்க முடியாத வகையில் எந்தவொரு சோதனையும் மேற்கொள்ளப்படமாட்டாது.

தேர்தல் காலங்களில் இராணுவத்தினர் வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். பொலிசாரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ற வகையில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் அமையும் என்றும் அவர் கூறினார்.

## வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படுமென தே. திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர் அட்டைகள் அடுத்த மாதம் மார்ச் 21ஆம் திகதி தொடக்கம் தபால்மூலம் அனுப்புவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார். வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் தமது அடையாள அட்டையைக் காண்பித்து தபால் கந்தோரில் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் .இல் தேர்தல் அவதானிப்புக்கு 1274 கண்காணிப்பாளர் நியமனம்

யாழ். மாவட்டத்தில் இடம் பெறும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த 1274 தேர்தல் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என சர்வதேச மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பை நடத்தி வரும் பெவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வீ.ஆனந்தசங்கரியின் சுயேட்சைக் குழு E.P.D.P, புளொட், E.P.R.L.F (வரதர் அணி) ஆகிய தமிழ் தேச விரோதக் கட்சிகளும் ஜாதிகஹெல உறுமய போன்ற சிங்கள இனவாதக் கட்சிகளும் யாழ். மாவட்டத்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாகப் போட்டியிடவுள்ளன.

இதனால் ஏற்படவுள்ள வன்முறைகளைக் கண்காணிப்பதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள 582 வாக்குச்சாவடிகளிலும் இக்கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதுடன் வன்முறைகள் ஏற்படின் சம்பந்தப்பட்ட சாவடியின் வாக்கெடுப்பு ரத்துச் செய்யப்படும் என இக் கண்காணிப்பு அமைப்பின் யாழ். இணைப்பாளர் பி.நிர்மானுஜன் தெரிவித்தார்.

இக்கண்காணிப்புக்குழுவில் இந்தியா, யப்பான், அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் பணியிலீடுபடுத்தப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(33)

## ஏலவிற்பனை

எல்ப்வான் - த12-9835
இயந்திர இலக்கம் - 3எல்-2846360
அடிச்சட்ட இலக்கம் - எல்எச்-123-0008732

கிளிநொச்சி கல்விக்கழகத்திற்குரிய ஓடக்கூடிய நிலையிலுள்ள மேற்படி எல்ப் வான் ஏலவிற்பனைக்கு விடப்படுகின்றது. இவ்வாகனம் கிளிநொச்சி கல்வி அலுவலகத்தில் வைத்து 27-02-2004 காலை 09.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலகநாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை வலயக்கல்வி அலுவல கத்தில் பார்வையிடலாம்.

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

(சி-9302)


# வாக்களிப்பு நிலையம் ஒவ்வொன்றிற்கும் இரு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்!

## பெவ்ரல் அமைப்பு ஏற்பாடு

(கொழும்பு)

இம்முறை பொதுத்தேர்தல்கள் நடைபெறும் ஒவ்வொரு வாக்களிக்கும் நிலையத்திற்கும் இரண்டு வெளிநாட்டு மேற்பார்வையாளர்கள் கடமை ஆற்றுவார்கள் என அறிவிக்கப்படுகிறது. தேர்தலை முழுமையாகக் கண்காணிப்பதற்கு 20,000 வெளிநாட்டு அங்கத்தவர்களை பெவ்ரல் அமைப்பு நியமித்துள்ளது. 15நாடுகளிலிருந்து இவர்கள் சிறிலங்காவுக்கு வருகை தரவுள்ளனர். இக்காலப் பகுதியில் இந்த வெளிநாட்ட வர்கள் தேர்தல் நடக்கும் சகல இடங்களையும் சென்று பார்வையிடுவார்கள். அத்துடன் வடகிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு இந்த பெவ்ரல் அமைப்பு விருப்பம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு கண்காணிப்பாளரின் முதல் தொகுதி கொழும்பு வருகை

(கொழும்பு)

பொதுத்தேர்தலை கண்காணிக்கும் பொருட்டு 'பெவ்ரல்' அமைப்பின் அழைப்பின் பேரில் கொழும்பு வந்துள்ள முதலாவது வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவினர் நேற்றுமுன்தினம் 11 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். நியமனப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முடிந்த பின்னர் தேர்தலுக்கு முன்னரான வன்செயல்களைக் கண்காணிக்கும் பணியில் அவர்கள் நடந்து கொள்வார்கள். எதிர்வரும் நாட்களில் மேலும் பல கண்காணிப்புக்குழுக்கள் கொழும்பு வரவிருப்பதாக பெவ்ரல் அமைப்பு கூறியுள்ளது.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திதி. 25.02.2004

தோற்றம்
09-11 -1938

மறைவு
08-03-2003

பண்பின் சிகரமே! நேர்மையின் காவலனே! நீங்கள்
எங்களை விட்டோடி ஓராண்டு சென்றிடினும்
மாறுமோ உந்தன் நினைவு.
செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்து வள்ளுவனும் வாசுகியும் போல்
இலட்சிய வாழ்வு வாழ்ந்து-அன்றில் பெடையெனவே நின்னடி பிசகாது-நின்
நிழலையே இடையறாது பற்றி வாழ்ந்த நின் இல்லாள் என்னும் நல்லாளைத்
தன்னந்தனியனாய்த் தவிக்கவிட்டுப் பிரிய மனம் வந்ததேனோ; முதுமையால்
துவண்டிடும் நாங்கள் அவளின் துயர் துடைக்க முடியாமல் துன்புறுகிறோம்

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

முன்னாள் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்,சமாதான நீதவான்-
சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்

என்றென்றும் நின் நினைவுடன் வாழும்சகோதரர்கள்
வே. தம்பையா,இ.பொன்னம்மா,க. பாக்கியம்,மைத்துனி-மகாலிங்கம் மனோன்மணி

(4267)

தகவல்:-
இ. தெய்வேந்திரம்
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லைத்தீவு.

வாதரவத்தை,
புத்தூர்



## பவள விழா







கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

"வாணி
உன்வீடும் வளவும்
நாம் அறிவோம்
அக்காணி முழுவதும்
கலகலப்பல்லவோ"

இடம் :- பிரதான மண்டபம் கிளி.மத்திய கல்லூரி
காலம்:- 25.02.2004, புதன்கிழமை
நேரம்:- காலை 09.00 மணிக்கு

இன்றைய தினம் 75ம் ஆண்டு நிறைவு விழாக்காணும் (பவள விழா) வேளையில் இதுவரை காலமும் இக் கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றியுணர்வுடன் வாழ்த்துகின்றோம்.

(4264)

இச்சிறப்பு நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு எமது கல்லூரியை வாழ்த்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கிளி /கிளிநொச்சி மத்திய கல்லூரி

அனுசரணை

(01) திரு.மு.இரவீந்திரன் (பழைய மாணவர்),
(02) திரு.பி.பில்ற்றன் (பழைய மாணவர்),
(03) திரு.மு.நிமலதாசன் (பழைய மாணவர்),
(04) திரு.ந.சுவேந்திரராசா (பழைய மாணவர்),
(05) திரு.வே.நவநீதராஜா (பழைய மாணவர்),
(06) திரு. செ.கோகிலேஸ்வரன் (பழைய மாணவர்),
(07) திரு. கி.சக்கிரதன் (பழைய மாணவர்),
(08) திரு.த.சிறிதரன் (பழைய மாணவர்).
(09) திரு.நா.ஜெயாளன் (பழைய மாணவர், கிளியரசன் சுவையகம், யாழ்.சாலை,கிளிநொச்சி)
(10) திரு.சி.சிவகுமார் (பழையமாணவர், இன்னிசை இலத்திரனியல், யாழ்.சாலை,கிளிநொச்சி).



## சிந்தனைக்கு

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன்; ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-01-2004

## மிரட்டுகிறார் பலகல்ல

"விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள" என்ற இராணுவத் தளபதி லெப்.கேணல் பல்லேகலையின் எச்சரிக்கையானது தமிழ் மக்களை ஒரு வகையில் மிரட்டும் தொனியிலானது அத்தோடு, சுதந்திரமான தேர்தல் வாக்களிப்பிற்கு அச்சுறுத்தலானதும், சனநாயக விரோதச்செயலுமாகும்.

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.கேணல் பலகல்ல கடந்தமுறை தேர்தலின்போதும் தமிழ்மக்கள் - குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் தமது வாக்குரிமைகளைச் செலுத்துவதற்கு இடையூறு விளைவித்தவர்.இது தொடர்பான குற்றச்சாட்டின் காரணமாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்,குற்றப் பணமும் செலுத்தியவர்.

இவற்றையும் மறந்து தற்பொழுது மீண்டும் மக்களின் சுதந்திரமான வாக்களிப்பிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பேசத் தொடங்கியுள்ளார். முதலில் கொத்தணி வாக்குச்சாவடிகள் எங்கு அமைக்கப்படுமென உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் தேர்தல் ஆணையாளர் வெளியிடாத நிலையிலும்- தேர்தல் ஆணையாளரின் பணியைத் தான் மேற்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுமென தெரிவித்துள்ள இராணுவத் தளபதி பலகல்ல வாக்காளர் மீது கடும் சோதனை மேற்கொள்ளப்படுமெனக் கூறியுள்ளமை அவரது இனவிரோத உணர்வையே காட்டுகிறது.

வாக்களிப்பு நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இல்லாமல் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சூனியப்பிரதேசத்தில் நடத்தப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பில் பரவலாக உள்ளது. ஆனால், இதனைச் சில காரணங்களைச் சொல்லி சிறிலங்கா படைத்தரப்பு தட்டிக்களிக்க முற்படுவதாகவே தெரிகின்றது.

இதில் சூனியப் பிரதேசத்தில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாமையால் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது சாத்தியமில்லை எனக் கூறப்படும் காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றல்ல. ஏனெனில் ஏற்கனவே வடபகுதியில் உள்ள சூனியப்பிரதேசம் இரண்டிலும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பிற்கும்- விடுதலைப் புலிகள் தரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. ஆகையினால், முழு அளவில் அப்பிரதேசத்தில் கண்ணிவெடிகள் உள்ளன என்பது நொண்டிச்சாட்டுப்போன்றதே.

இரண்டாவதாக தேர்தல், இடம்பெறுவதற்கு இன்னமும் 40 நாட்களுக்கு மேல் உள்ளன. ஆகையினால், அவசியமெனக் கருதும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலகுவில் மேற்கொண்டுவிட முடியும் ஆனால் அத்தகைய நடவடிக்கை எதிலும் அரச தரப்பு அக்கறைகாட்டுவதாக இல்லை.

இந்நிலையில், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைத்தல் என்பது மக்களின் சுதந்திரமான வாக்களிப்பிற்கு விளைவிக்கப்படும் இடையூறாகவே கொள்ளத்தக்கதாகும். அத்தோடு வாக்களிப்பிற்கு வருவோர்மீது கடும்சோதனை நடத்தப்படும் என்ற பலகல்லவின் அறிவிப்பானது வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் சுதந்திரமாகச் சென்று வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேரடியாக விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும்.

இவ் எச்சரிக்கையானது இராணுவம் தேர்தலின் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள மக்கள் வாக்களிப்பதை, ஒரு வகையில் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டது என்றுகூடக் கூறமுடியும். அதாவது சோதனை என்ற ரீதியில் நேரத்தை இழுத்தடித்தல், மிரட்டுதல் போன்றவற்றால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்களின் வாக்குப் பதிவுத் தொகையைக் கட்டுப்படுத்த முடியும். இது வடக்கு-கிழக்கில் சிறிலங்கா அரசின் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவின் ஏவலாளர்களாகச் செயற்படுபவர்களுக்கு உதவுவதாக இருக்கக் கூடும்.

அதுமட்டுமல்ல, வாக்குகள் பதிவாகும் எண்ணிக்கை குறைவடையும் பட்சத்தில் தேசியப் பட்டியல் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய ஆசனங்கள் கூடக் குறைவடையக் கூடும் ஆகையினால், இராணுவத் தளபதி பலகல்லையின் மிரட்டலானது அரசியல் நோக்கம் கொண்டது என்று கூறுதல் கூடத்த தவறாகமாட்டாது.

ஆகையினால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் பாதுகாப்பான முறையில் , அழுத்தம் எதுவுமின்றி வாக்களிக்க ஏற்பாடுகளைச் செய்தல் தேர்தல் ஆணையாளரின் கடமையாகும். தேர்தல்வரும்வரையில் இருந்துவிட்டோ, அன்றித் தேர்தலின் போது இடம்பெறும்முறைகேடுகள் என்பவற்றைக் கண்டுகொண்டபின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலோ அர்த்தமற்றதொன்றாகும். இது தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமைகளை மறுப்பதோடு தேர்தல் மோசடிகளுக்கு அனுசரணையான நடவடிக்கைகளாகவுமே இருக்கும்.

# தமிழினத்தின் ஒற்றுமையை வலியுறுத்தும் தேர்தலாக இது அமையப்போகிறது

## -செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய தேர்தலாக இந்தத் தேர்தல் வந்திருக்கிறது. ஒருகுடையின் கீழ் தமிழ்த் தரப்பு ஒன்றிணைந்திருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும். இவ்வாறு தமிழ்க்கூட்டமைப்பு வன்னி தேர்தல் மாவட்ட தொகுதியின் முதன்மை வேட்பாளரும் ரெலோ இயக்கத்தலைவருமான அ.அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் எழுச்சி நிச்சயமாக எமது தமிழ் சமூகம் ஒற்றுமையாக ஒருகுடையின் கீழ் உள்ளது என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுகிறது எமது மக்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒருதீர் வைப் பெற வேண்டும் என்றால் எமது தமிழ் மக்கள் அனைவரும் ஒருகுடையின் கீழ் வாக்களிக்க வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெறுவோம். யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் அமைவோம் என்பதனை உறுதியாகவும் ஆணித்தரமாகவும் கூறிக்கொள்கிறேன். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உழைக்கும் என மேலும் அவர் கூறினார்.

ஆட்சி அமைக்கும் சக்தியாக நீங்கள் வந்தால் அமைச்சுப் பதவிகளை பெறுவீர்களா என்று கேட்டதற்கு நிச்சயமாக ஒருபோதும் இல்லை. தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை ஒரு அமைச்சு பதவிகளையும் நாம் பெற மாட்டோம் என்றார். ஒரு வேளை உங்களின் கோரிக்கையை இரு கட்சிகளும் ஏற்கவில்லை என்றால் அடுத்த நடவடிக்கை என்ன? என்று கேட்க நிச்சயமாக போர்தான். அதனைத் தீர்மானிப்பவர்கள் தென் இலங்கை அரசியல் தலைவர்களாகத்தான் இருப்பார்கள் என அவர் மேலும் கூறினார்.

(21)

# புலிகளின் சார்பாகவே நாங்கள் தேர்தலில் போட்டியிடுகின்றோம்

## த.வி. கூட்டணியின் செயலர் இரா. சம்பந்தன்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாகத் தான் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரில் போட்டியிடுகின்றோம். இதனைப் பகிரங்கமாகக் கூறி வைக்கின்றோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் திங்கள் மாலை திருமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற முதலாவது தேர்தல் கருத்தரங்கில் தெரிவித்தார்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் திருமலை மாவட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. "தற்போதைய சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு மற்றும் அவர்கள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் ஆகியவற்றுக்கு தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு இருப்பதை சர்வதேச சமூகத்தினருக்கு உணர்த்துவதற்காகவே நாம் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றோம்."

"எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழினத்தைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. காரணம் விடுதலைப்புலிகள் முழுமையாக இத் தேர்தலில் பங்குபற்றுவதுதான். தங்கள் சார்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றியைப் பெறவேண்டும் என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும்." சமாதான முயற்சியில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும் எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களின் ஒவ்வொரு வாக்கும் பயன்படும். விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாட்டை தமிழினம் முழுமையாக ஆதரிக்கின்றது என்பதை எதிர்வரும் தேர்தல் எடுத்துக்காட்ட வேண்டும். வேட்பாளர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான க. துரைரட்ணசிங்கம் மற்றும் எஸ். சண்முகநாதன், எஸ். கௌரிமுகுந்தன், சாகுல் ஹமீது மற்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம், ஐக்கிய தேசியக்கட்சித் திருமலை பிரமுகர் சட்டத்தரணி என். ஆர். வரதன் ஆகியோரும் கலந்துரையாடலில் கருத்துக்களைத் தெரிவித்தனர்.(25)

# தேர்தல் சட்டங்களை மீறுவோரை பிடிவிறாந்தின்றி பிடிக்க முடியும்

## - பிராந்திய பொலிஸ்மா அதிபர் காமினிநவரட்ண

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறும் எந்தவொரு நபரையும் பிடிவிறாந்து இல்லாமல் கைது செய்ய முடியும் என்று சிறிலங்கா பொலிஸ் தேர்தல் பணியக தலைவரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டவாக்கம் இம்மாதம 17ஆம் திகதி முதல் அமுலில் இருக்கும். ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை இது செல்லுபடியாகும்.

தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக ஊர்வலம் ஒன்றை நடத்தியதாக அல்லது அதில் பங்குபற்றியதாக அல்லது வேறு நபர்களை அதில் கலந்து கொள்ளச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் எவரையும் கைது செய்வதற்கு பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் அல்லது வேறு பொது இடங்களில் கொடிகளைப் பறக்க விடுதல், அல்லது விளம்பரங்களை ஒட்டுதல், மற்றும் தேர்தல் சின்னங்கள், புகைப்படங்கள்,பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிக்கு வைத்தல் என்பனவும் தேர்தல் சட்டத்திற்கு முரணானதாகும்.

தேர்தல் பிரச்சார கூட்டங்களை நடத்துவதற்கு குறிப்பிட்ட பகுதியிலுள்ள பொலிஸ் நிலை யங்களில் விண்ணப்பப்பத்திரங்களை ஒப்படைப்பதன் மூலம் அனுமதி பெறப்பட வேண்டும்.

## அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரி கொழும்பு வருகின்றார்

(கொழும்பு)

அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த தென்னாசியப்பிராந்திய விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஜோண்ஸ்ளோசர் இவ்வாரம் கொழும்பிற்கு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிற்கு வரும் இவர் பல்வேறுபட்ட அரசாங்க அதிகாரிகளுடனும் அரசியல் தலைவர்களுடனும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடனும் தனியார் துறையினருடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் வன்முறை உயர்வு 22 வரை 43 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னான வன்செயல்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக சிறிலங்கா பொலிஸ் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி நியமனப் பாத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து நேற்று மாலைவரை 43 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.இதில் 27 முறைப்பாடுகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 13 முறைப்பாடுகளை செய்துள்ளது. வேறு அரசியல் குழுக்களும் இரு முறைப்பாடுகளை செய்துள்ளது. 39 முறைப்பாடுகள் சட்டத்தை மீறும் சம்பவங்களாகும்.

## சஹிட் அவ்ரிடி இணைவு




இந்தியாவுக்கெதிராக விளையாடும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் மீண்டும் சஹிட் அவ்ரிடி இணைக்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்களில் பிரகாசிக்கத் தவறியதால் இவர் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இவர் 14 டெஸ்ட் மற்றும் 176 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். இவரைத் தவிர இம்ரான் நசீர்,சலிம் இலாஹி, நவித் லத்திப் ஆகியோரும் அணியில் இடம் பெறுகின்றனர்.

## பார்வையற்றோர் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் அணி முன்னணியில்!

பாகிஸ்தானில் கராட்சியில் நடை பெறும்இந்திய-பாகிஸ்தான் கண்பார்வையற்றோர் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடர் நடைபெற்று வருகிறது.

இத் தொடரில் இதுவரை நடந்த இருபோட்டிகளிலும் பாகிஸ்தான் அணிவென்று முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டிகளில் முதலில்ஆடிய இந்திய விழிப்புலவற்றோர் அணி 39 ஓவர்களில் 5விக் கட்டுக்களையிழந்து 348 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 38.5 ஓவர்களில் 6 விக்கட்டுக்களையிழந்து 350 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணியின் ரஜிந்தர்வர்மா சிறப்பாக ஆடி 138 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தத் தொடரின் முதலாவது போட்டியிலும் பாகிஸ்தான் 7 விக்கட்டுக்களைப் பெற்றது.

# சுதந்திரமான நீதியான தேர்தல் இலங்கையில் நடத்தப்பட வேண்டும்

### – பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்



(லண்டன்)

இலங்கையில் சுதந்திரமானதும் நீதியான முறையிலும் தேர்தலை நடத்த வேண்டும் அத்தோடு மிக விரைவில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண் டும் என பிரித்தானிய வெளியுற வுத்துறை அமைச்சர் மைக் ஒபிறியன் இலங்கை அரசியல் கட்சிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசனை லண்டனில் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெ டுப்பதற்கு இலங்கையில் ஸ்திரமான ஆட்சி தேவை என்றும் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை முன்னோக்கிச் செல்லுமாகில் நீண்ட கால அபிவிருத்தி உதவிகளை வழங்கவும் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

### - வன்னித் தேர்தல் மாவட்ட -

# கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரம் நாளை வவுனியாவில் ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நாளை ஆரம்பமாகின்றது.

முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வவுனியாவில் உள்ள குருமண் காடு கலைமகள் விளையாட்டரங்கிலும் இரண்டாவது, தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வெள்ளிக்கிழமை மன்னார் பொதுவிளையாட்டரங்கிலும் நடைபெற உள்ளதாகவும் இதில் கூட்டமைப்பு வேட்பாளர்களும், கூட்டமைப்பு ஆதரவாளர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதாகவும் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார். (10)

# முல்லை. மின் உற்பத்தி நிலையம் கடந்த திங்களன்று திறப்பு

முல்லைத்தீவிற்கான மின் உற்பத்தி நிலையம் நேற்று முன் தினம் திறந்துவைக்கப் பட்டது. அன்று நண்பகல் 12.30 மணிக்கு கரைதுறைப்பற்றுப் பிர தேச செயலாளர் திருமதி. சுகிர்தா நேசரட்ணம் தலைமையில் நிகழ் வுகள் ஆரம்பமாகின.

பொது ஈகச்சுடரினை மு.ந.பு. குழு தலைவர் இராசையா ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக்கொடியினை முல்லை மாவட்ட கடற் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் புயலினி ஏற்றி வைத்தார்.

மங்கல விளக்கினை தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை மாவட்டப்பொறுப்பாளர் இசைய முதன், மின்பொறியியாளர் ராஜ் குமார் ஆகியுயோர் ஏற்றி வைக்க மின்நிலையக் கட்டடத்தினை வன்னிப்புனர்வாழ்வுக்குத்துணை புரியும் அமைச்சின் செயலாளர் தர்மலிங்கம் நாடாவினை வெட்டித் திறந்து வைத்து மின் இயந்திரத் தினையும் ஆரம்பித்து வைத்தார்.

பெயர்ப்பலகையினை புதிய கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் கிருஸ்ணபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார்.

கருத்துரைகளை மின்பொறியியலாளர் ராஜ்குமார் த.நி.சே முல்லை மாவட்டப் பொறுப்பாளர் இந்த நிகழ்வில் கிராம அலுவலகர்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாண வர்கள், பிரதேசசபைப் பணிப் பாளர்கள் த.நி.சேவையின் முல்லை மாவட்ட பொறுப்பாளர் பணியாளர்கள் அரச அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகஸ் தர், திட்டப்பணிப்பாளர், மதகு ருமார்கள், நலன்விரும்பிகள், பாவனையா ளர்கள், விடுதலைப் புலிகளின் துறை சார் பொறுப் பாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண் டனர். கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஸ்ண சாமி, வன்னிப் புனர்வாழ்வுக்கு துணைபுரியும் அமைச்சின் செயலாளர் தர்மலிங்கம் ஆகியோர் வழங்கினார்கள். (20)




## கூட்டமைப்பினர்....

களின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி திருமலை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் திலக் ஆகியோரும் இணைந்து இதன் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

# சந்திக்க மறுப்பு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் பௌத்த பிக்குகளை சந்திக்க மல்வத்த பீடாதிபதி மறுத்துள்ளார்.

கண்டிக்குச் சென்ற இந்த பிக்குகளை மல்வத்த பீடாதிபதி சந்திக்க மறுத்தமையையடுத்து ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

பௌத்த துறவிகள் தேர்தலில் போட்டியிடுவதை பௌத்த சங்கம் வன்மையாக எதிர்ப்பதாக மல்வத்த பீடாதிபதி கூறியுள்ளார்.

# மெய்வன்மை போட்டி

(மல்லாவி)

மு.அனிச்சியம்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் கு.ஜெகதீஸ்வரன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

மங்கள விளக்கினை பிரதம விருந்தினரான பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா, பாண்டியன்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. கலைவாணன் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் த.தர்மேந திரா ஏற்றிவைத்தார்.

மாணவர்க்ளின் விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டிய வீரவீரங்கனைகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இப்போட்டியில் இளங்கோ முதலாம் இடத்தையும், கம்பன் 2ஆம் இடத்தையும், வள்ளுவர் 3ஆம் இடத்தையும், பெற்றுக் கொண்டது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (24)

## நோர்வே...

இன்று நடைபெறும் பேச்சுக்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது பற்றியும் ஆராயப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## ஹக்கீமின்...

பெற்றதாக எமது செய்தியாளர் அறிவிக்கின்றார்.

இதேவேளை, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பின் ஆதரவாளர்களும் கல்முனையில் இருந்து மருதமுனை நோக்கி ஊர்வலம் ஒன்றை நடத்தினர். (32)

# மின்னொளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி முடிவு

மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப்போட்டியில் நேற்று மின்னொளியில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா அணி முல்லை அணியை 3-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இன்று யாழ். அணியுடன் நடைபெறும் அரையிறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் அபேகுணசேகரா, விமலசேன ஆகியோர் கடமையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற வலைப் பந்தாட்டப் போட்டியில் திருமலை அணி முல்லை அணியை 55-13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இன்று யாழ். அணியுடன் நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் விஜயசிறி,, செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் கடமையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டியில் வவுனியா அணி1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது. R.குகனேஸ வரன் கோல் போட்டார்.

முன்னதாக வீரர்கள் சிறப்புப் படையணி சிறப்புத்தளபதி கேணல் சொர்ணத்துக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி (வெள்ளி) மன்னார், வவுனியா அணிகளுக்கிடையே நடைபெறும்.

# துணுக்காய் வலயக்கல்விப் பணிமனை மாங்குளத்தில் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக்கான நிரந்தரக் கட்டடம் நேற்று முன்தினம் மாங்குளத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் 12 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் மங் கல விளக்கினை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அகம னான், மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் உள்ளிட்டோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந் தன் ஏற்றி வைத்தார். துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக் கொடியை வலயக்கல்விப் பணிப் பாளர் மா. தேவேந்திரன் ஏற்றி னார். இதனைத் தொடர்ந்து வல யக் கல்விப் பணிமனைப் பெயர்ப பலகையை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அடுத்து புதிதாக அமைக் கப்பட்ட வலயக்கல்வி அலுவலகத்தை வலயக்கல்விப் பணிப் பாளர் மா. தேவேந்திரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வரவேற்பு ரையை உதவிக் கல்விப் பணிப் பாளர்(தமிழ்) ந.விஜரத்தினம் நிகழ்த்தினார். தலைமை உரையை வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் ஆற்றினார்.




வலயக்கல்விப் பணிமனை மாங்குளத்தில் திறந்து வைக்கப் பட்டதை வாழ்த்தி மு/யோகபுரம் மகாவித்தியாலயம், மு/மல்லாவி மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் கோட்ட அதிபர், ஆசிரியர், மாண வர்கள் ஆகியோரால் வாழ்த்து மடல்கள் வழங்கப்பட்டன தொடர்ந்து ஆசியுரையை வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான் சிஸ் யோசப் அடிகள், முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், கிளி. வலயக்கல்விப் பணிப்பா ளர் ப. அரியரத்தினம், முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா, வவுனியா தெற்கு வலயகல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை சி. இரா ஜேஸ்வரன் ஆற்றியதுடன் நிகழ் வுகள் நிறைவு பெற்றது. (லோ)

## இலட்சியத்தை...

யில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து அரசியல் அபிலாசைகளை வெளிப் படுத்தும் வகையில் கூட்டமைப் பிற்கு ஆதரவு வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (33)

## ஈ.பி.டி.பி.க்கு...

ஆட்சேபங்களை தெரிவித்து வரும் நிலையில் இக்கட்சியினர் தமது மனு தாக்கலுக்கு வந்தபோது இவர்களுக்கு நூற்றுக்கணக்கான விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப் பட்டிருந்தது. (33)

## தேர்தலில்....

பஹாவில் 14 அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சைக்குழுக்களும் மாத்தறையில் ஐக்கிய மெலித் முன்னணி சமர்ப்பித்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இங்கு 11 அரசியல் கட்சிகளும் 08 சுயேட்சைக் குழுக்களும், யாழ்ப்பாணத்தில் 08 அரசியல் கட்சிகளும், 02 சுயேட்சைக் குழுக்களும், இங்கு ஐ.தே.கட்சியும், ஐ.ம.சு. முன்னணியும் போட்டியிட வில்லை. குருநாகலில் சுயேட்சைக் குழு சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு 15 அரசியல் கட்சிகளும், 11 சுயேட்சைக் குழுக்களும், களுத்துறையில் தேசிய அபிவிருத்தி முன்னணியின் பட்டியல் நிராகரிக்கப்பட்டுள்ளது. இங்கு 13 அரசியல் கட்சிகளும், 09 சுயேட்சைக் குழுக்களும், கண்டியில் 14 அரசியல் கட்சிகளும், 10 சுயேட்சைக் குழுக்களும் சமர்ப்பித்த வேட்பு மனுக்களில் 01 சுயேட்சைக் குழுவின் பட்டியல் நிராகரிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் முஸ்லிம் கட்சி சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இங்கு 15 அரசியல் கட்சிகளும், 08 சுயேட்சைக் குழுக்களும் கேகாலையில் 13 அரசியல் கட்சிகளும், 09 சுயேட்சைக் குழுவும், இரத்தினபுரியில் 12 அரசியல் கட்சிகளும், 08 சுயேட்சைக் குழுக்களும், பொனறுவலையில் 12 அரசியல் கட்சிகளும், 07 சுயேட்சைக்குழுக்களும், மாத்தளையில் 14 அரசியல் கட்சிகளும், 06 சுயேட்சைக் குழுக்களும், நுவரெலியாவில் 14 அரசியல் கட்சிகளும், 04 சுயேட்சைக் குழுக்களும், பொலநறுவையில் 09 அரசியல் கட்சிகளும், 10 சுயேட்சைக் குழுக்களும், வன்னியில் 10 அரசியல் கட்சிகளும், 09 சுயேட்சைக் குழுக்களும், காலியில் 12 அரசியல் கட்சிகளும், 09 சுயேட்சைக் குழுக்களும் திகாமடுல்லவில் 14 அரசியல் கட்சிகளும் 27 சுயேட்சைக் குழுக்களும், திருகோணமலையில் 10 அரசியல் கட்சிகளும், 06 சுயேட்சைக் குழுக்களும், இதில் 02 சுயேட்சைக் குழுவின் வேட்பு மனு தேசிய அபிவிருத்தி முன்னணி என்ற தென்னிலங்கை கட்சியின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் 14 அரசியல் கட்சிகளும், 12 சுயேட்சைக்குழுக்களும், அநுராதபுரத்தில் 11 அரசியல் கட்சிகளும், 05 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலை...

நிமிர்ந்து நிற்போம்." "எமது நிலம் எமக்கு வேண்டும் என்ற பொங்குதமிழ் எழுச்சிக்கோசத்தின் அடிப்படையிலும் புலிகளே தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகள் அவர்களுடன் மட்டுமே பேச்சுக்கள் இடம் பெறவேண்டும். என்பதை வலியுறுத்தியும் இத்தேர்தல் கொள்கை முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக் கப்பட்டும் எழுச்சி கீதங்கள் மற்றும் பரவலான பரப்புரைகள் என்பன வற்றின் மூலம் மக்கள் மத்தியில் இனஉணர்வினை ஏற்படுத்தி சிலபுல்லுருவிகளால் பரப்பப பட்டுள்ள மாற்றுக்கருத்துக்களை களைவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (33)

## யாழ்...

சுயேட்சைக்குழு- I -வீ.ஆனந்த சங்கரி தலைமையில் வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தது. இக்குழுவிற்கு பூட்டு சின்னமும் அதேபோன்று சுயேட்சைக்குழு- II -முகமட் சாலிஸ் முகமது ரபி என்பவரது தலைமையில் தாக்கல் செய்யப்பட்ட அக்குழுவிற்கு "கூஜா" சின்னமும் ஒதுக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவத்தாட்சி அலுவலக செ.பத்மநாதன் மேலும் தெரிவித்தார். வீணை சின்னத்தின் ஈ.பி.டி.பியும் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதன் அணியும் இணைந்து போட்டியிடுகின்றனர். (27)(33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2#ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.